1993 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) புதுக்கோட்டை மாவட்டம், வல்லநாட்டு செட்டியார்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே இந்த வல்லநாட்டு செட்டியார்கள் அதிகமாக வசிக்கிறார்கள். இந்த வல்லநாட்டு செட்டியார்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்ப்பதற்காக அந்த சமுதாயத்தினர் நீண்ட நெடுங்காலமாக போராடி வருகிறார்கள். ஆகவே மாண்புமிகு டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேயே அந்த வல்லநாட்டு செட்டியார்களுடைய, ஏழையெளியவர்களாக, வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற அந்த மக்களுடைய, தரத்தை உயர்த்துகின்ற வகையிலே வருகின்ற கால கட்டத்திலேயாவது அந்த மக்களுடைய கோரிக்கை ஏற்க அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது கமிஷனான அம்பாசங்கர் கமிஷன் இந்த இனத்தவரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்க அரசுக்கு பரிந்துரை செய்யவில்லை. மாறாக இது போன்ற முரண்பாடுகளை களைவதற்காகத்தான் இன்றைக்கு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிரந்தர ஆணையத்தினை ஒன்று ஏற்படுத்த உத்தரவிட்டுள்ளார்கள். அந்த நிரந்தர ஆணையம் அரசுக்கு பரிந்துரை அளிக்கும் பட்சத்திலே அரசு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 500, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

500—

பூம்புகாரில் தொழிற்பேட்டை அமைத்தல்

*15337—திரு. எம். பூராசாமி :

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகாரில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

•

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அங்கே 2000 ஏக்கர் நிலம் அரசு நிலம் இருக்கிறது. அங்கே தொழிற்பேட்டை அமைத்தால் அந்த பூம்புகார் தொகுதியில் வாழ்கின்ற அத்தனை மக்களுக்கும் அது பயனுள்ளதாக இருக்கும். எதுவுமே இல்லை இல்லை என்று சொல்லாத இதய தெய்வத்தின் அரசிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை எடுத்து பரிந்துரை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் சிட்கோ தொழில்பேட்டையில் 20.90 ஏக்கர் நிலப் பரப்பில் சிட்கோ தொழில்பேட்டை அமைந்துள்ளது. இதிலே 12.90 ஏக்கர் நிலம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. அங்கே புதிய தொழில் முனைவர்களுக்கு தொழில்கூடம் தேவைப்படுமானால் சிட்கோ இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இரண்டாயிரம் ஏக்கர் அரசு நிலங்கள் உள்ளன. நிறைய பேர்கள் அங்கே தொழில்பேட்டை அமைப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். ஆகவே வருகின்ற நிதி ஆண்டிலேயாவது தொழில்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10 தொழில் முனைவர்களுக்குக் குறையாமல் அந்த பகுதியிலேயிருந்து விண்ணப்பங்களை பெற்று கொடுப்பார்களேயானால் சிட்கோ அது குறித்து உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆசைமணி,

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை—காயிதே மில்லத் மாவட்டம், நாகைக்கு அருகிலே இருக்கின்ற பனங்குடியிலே ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைய இருக்கிறது. இந்த சுத்திகரிப்பு ஆலை ஆரம்பிக்கப்பட்டதற்குப் பின்னாலே அதிலேயிருந்து கிடைக்கின்ற பல்வேறு உபரி பொருள்களைக் கொண்டு அந்தப் பகுதியிலே ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆசைமணி அவர்களுடைய கோரிக்கை குறித்து செயற்குறிப்பு எதுவும் இல்லை. ஆனால் ஏற்கனவே நாகை—காயிதே மில்லத் மாவட்டத்தில் இருக்கின்ற சிட்கோ தொழில்பேட்டையில் நிலங்கள் 12.90 ஏக்கர் இடம் அபிவிருத்திச் செய்யப்பட்ட இடமாக வைக்கப்பட்டுள்ளது. இங்கே தொழில் திட்டத்தினோடு தொழில் முனைவர்கள் முன்வருவார்களேயானால் அரசு இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளும்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். பன்னீர் செல்வம்.

திரு. என். பன்னீர் செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தொழில்பேட்டைகள் பழைய தஞ்சை மாவட்டம் என்ற ரீதியிலே கும்பகோணம் பகுதியிலே அமைக்கப்படுமா என்பதைத் தெரிவிப்பாரா அமைச்சர் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது குறித்து மாற்று வினா கொடுப்பாரானால் அரசு உரிய பதிலை வழங்கும்.

487—

திருவட்டார் தொகுதி கிராமங்களில் மின் அழுத்தத்தை சீர்படுத்துதல்

*10898—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் தொகுதி சாத்திரவிளை, சாயப்பறம்பு, குரியோடு போன்ற கிராமங்களில் மின் அழுத்தம் குறைவாக இருப்பது அரசுக்குத் தெரியுமா ?